**Anode Fabricators Pvt Ltd**
Innovation In Inert Metals
MMO, Platinized Ti & Nb Anodes
#48 Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 2278 1362 Email: info@tianode.com Web: www.tianode.com

# INTER - ORGANIZATIONAL NEWSLETTER – JUNE 2007

## FORECASTING 07-08

| | |
|---|---|
| Turnover | : 150% ↑ |
| Employment | : 10% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Rejection Rate | : 100% ↓ |

## TESTIMONIALS

**Customers:**

| | |
|---|---|
| Up to April 07 | : 228 Nos |
| Up to May 07 | : 231 Nos |

**Performance: May 2007**

| | |
|---|---|
| Turnover growth | : 5.18 % |
| Employment growth | : 2.47 % ↓ |
| 100% Attendance | : 12.65 % |

## MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | – Director |
| Mrs. J. Vanajambika | – Director |

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jeyakumar | - CEO. |
| Mr. RS. Thangappan | - GM. |
| Mr. R. Vijaya Sai | - QA. |
| Mr. M. Suyambu | - Planning. |
| Mr. T. Amaladhas | - Plating. |
| Mr. T. Ramesh | - Purchase. |
| Mr. N. Murugan | - Production. |
| Mr. RM. Ravichandran | - Marketing. |
| Mr. C. Sounder Suresh | - Stores. |
| Mr. C. Babu | - Finance. |

## ACHIEVEMENT




## தீ-மலம், 'ஒழிவு - திக்ஷ' என்பது மல ஒழிவு.

மனிதர்களாகிய நமக்கு ஐந்து மலம் உள்ளது. அவை ஆணவம், கன்மம், மாயை, நினைப்பு, மறப்பு என்பனவாகும். ஆதில் முக்கியமானது ஆணவம், கன்மம், மாயை.

ஆணவம் என்பது தான் என்ற அகங்காரம் அதாவது நம்மை விட பெரியவன் இவ்வுலகில் இல்லை என்று கர்வம் கொண்டு வாழ்வது. கன்மம் என்பது வினை. நாம் முற்பிறவியில் செய்த வினைகள் நாம் இறைவனை வழிபட தடுக்கிறது. அடுத்து மாயை என்பது இவ்வுலகப் பற்று அதாவது மண், பெண், போகம் போன்ற ஆசையால் சிக்குண்டு கிடப்பது. மேற்கண்ட மலங்களை ஒழித்தால் தன்னை அறியவும், நம்மைப் படைத்த தலைவனை அறியவும் இயலும். அப்போது இறை அனுபவம் கூடும்: இறைவனை அடைய வழி கிடைக்கும்: நமது பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனோடு இரண்டற கலக்கலாம்: மேலும் மரணத்தை வென்று பேரின்ப பெருவாழ்வு வாழலாம்.

அடுத்தது வினை இதனை அழிக்க அல்லது ஒழிக்க தானம் செய்ய வேண்டும். மேலும் தவமும் செய்தல் வேண்டும். இவ்விரண்டும் இல்லாமல் வினையை அறுக்க முடியாது. தானம் செய்தால் தவம் கைக்கூடும். தவம் கைக்கூடினால் வினை ஒழியும். வினை ஒழிந்தால் வானவர் நாடு திறக்கும். நமது வினையை எளிதில் அழிக்கக்கூடிய மருந்து அன்னதானம் ஆகும். ஏழை ஜீவன்களின் பளசியை நாம் போக்கினால் அவர் உள்ளம் குளிர்ந்து வாழ்த்தும். வாழ்த்து நமது வினையை அறுத்துவிடும். எனவே நம்மால் முடிந்தவரை பசியாற்றுவித்தலை விரதமாக அனுசரித்தல் வேண்டும்.

இவ்வினையால் தான் நமக்கு வம்பு, வழக்கு, பிணி, பயம், பொருள் இழப்பு, விபத்து போன்ற துன்பங்கள் வந்து. நம்மை துன்புறுத்தி கொண்டே இருக்கிறது. மேற்கண்ட துன்பங்கள் நம்மை சேரக்கூடாது என்று நினைப்பவர்கள் தானம் செய்வதை விரதமாக கடைபிடித்தல் வேண்டும்.

அடுத்தது மாயை இது உலகப்பற்று இப்பற்றை இறைவன்மீது பற்றுவைத்துதான் மாயையை அறுக்க முடியும்.

நீங்கள் ஆணவம், கன்மம் (வினை) இரண்டையும் ஒழித்துவிட்டால் இறைவனின் மீது பற்று உங்களுக்கு எளிதில் வந்துவிடும். இறைவனின் மீது பற்று வைத்த உடனே இவ்வுலகப்பற்று ஒழிந்துவிடும்.
எனவே நீங்கள் தீட்சை தருகிறார் என்று எவராவது சொல்லக்கேட்டு, போலிகளிடம் ஏமாற வேண்டாம்! வீண் செலவு செய்ய வேண்டாம்!
எனவே ஆன்மநேயம் கொண்ட சகோதர சகோதரிகளே! நீங்கள் இறைவனிடம் தீ'யை கேட்டு பெறுங்கள். அவர் தயவே வடிவமாய் உடையவர்: அதாவது கோடி தாய்மார்களின் கூட்டு அன்புக்கு நிகரானவர்: நீங்கள் அருள் பொருட்டு எதை கேட்டாலும் கொடுக்க காத்துக் கொண்டு இருக்கிறார். நமது இறைவன் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.



தொகுத்தளித்தவர்
- Ms.P.E. நான்சி, இயக்குனர்.

# வரலாறு படைத்தோரின் வாழ்க்கை குறிப்புகள்



பெயர் : அபிரகாம் லிங்கன்
பிறப்பு : 12.2.1809
இறப்பு : 15.4.1865
இடம் : கென்டுக்கி

அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவராக விளங்கிய ஆபிரகாம் லிங்கன் அந்த நாட்டில் அல்லது வேறெந்த நாட்டிலும் தோன்றிய மிக்க புகழ் வாய்ந்த – மிகப்பெரும் போற்றுதலைப் பெற்ற அரசியல் தலைவர்களில் ஒருவர் ஆவார். கொடிய அடிமை முறையை ஒழித்து 35,00,000 அடிமைகளுக்கு விடுதலை அளித்த ஒரு மாபெரும் சாதனையாளர் ஆவார். மாபெரும் சாதனைதான். ஆனால், பின்னுற நோக்கும் போது, உலகெங்கும் அடிமை முறையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டு வந்த சக்திகள், எதிர்த்து வெல்ல முடியாத அளவுக்கு பெருவலிமை வாய்ந்தனவாக இருந்தார் என்பதனைக் காண்கிறோம். லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகப் பதவியேற்பதற்கு முன்பே பல நாடுகள் அடிமை முறையை ஒழித்துவிட்டார்.

எனவே அதிகமாகப் போனால் ஒரு நாட்டில் அடிமைமுறையை ஒழிப்பதை விரைவுபடுத்தினார் என்ற ஒரே பெருமையை மட்டுமே லிங்கனுக்கு அளிக்க முடியும்.
ஆயினம் தென் மாநிலங்கள் பிரிந்து செல்ல முயன்றதற்கு இடங்கொடாமல் அமெரிக்காவின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதில் வெற்றி பெற்றதை லிங்கனின் தலையாய சாதனையாகக் கூறலாம்.
ஆனால், அமெரிக்கக் குடியரசுத் தலைவராக லிங்கன் தேர்ந்தெடுக்கப்படடதுதான், தென் மாநிலங்கள் பிரிந்து செல்ல விரும்பியதற்குக் காரணமாக அமைந்தது. அத்துடன், லிங்கன் இல்லாமல் வேறொருவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், உள்நாட்டுப் போரில் வடக்கு மாநிலங்கள் தோல்வி கண்டிருக்கும் என்றும் உறுதியாக கூறுவதற்கில்லை. மேலும், வடக்கு மாநிலங்கள் மக்கள்தொகை அதிகமாக கொண்டிருந்தன. அதோடு, தென் மாநிலங்களைவிட வடக்கு மாநிலங்கள் தொழில் உற்பத்தி மிகப் பெருமளவுக்கு இருந்து வந்தது. இந்த இரு சாதகங்களையும் வைத்துக் கொண்டே வடக்கு மாநிலங்கள் உள்நாட்டுப் போரைத் தொடங்கின.

உள்நாட்டுப் போரை வடக்கு மாநிலங்கள் வெற்றிகரமாக நடத்தியிராவிட்டாலுங் கூட, வரலாற்றின் போக்கில் பெரும் மாற்றம் எதுவும் ஏற்பட்டிருக்காது. மொழி, சமயம், பண்பாடு, வாணிகம் ஆகிய தடைகளினால் வடக்கும் தெற்கும் மிக வலுவாகப் பிணைக்கப்பட்டிருந்தன. தெற்கு பிரிந்து சென்றிருந்தாலும் விரைவிலேயே வடக்கும் தெற்கும் மீண்டும் இணைந்திருக்கும். அவற்றுக்கிடையிலான பிரிவினை, அறுபது ஆண்டுகளுக்கு ஏன், ஐம்பது ஆண்டுகளுக்குக் கூட நீடித்திருந்தாலும், அது உலக வரலாற்றில் ஓர் அற்ப நிகழ்ச்சியாகவே இருந்திருக்கும். (தென் மாநிலங்கள் நிரந்தரமாகப் பிரிந்து சென்றிருந்தாலும் கூட, அமெரிக்கா இன்று உலகில் மிக அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நான்காவது நாடாகவும், முதன்மையான தொழில் வல்லரசாகவும் விளங்கியிருக்க முடியும் என்பதையும் இங்கு மறந்துவிடலாகாது)

அப்படியானால் லிங்கனை முக்கியத்துவமில்லாத ஒரு மனிதராகக் கருதுவதா? அவருடைய வாழ்க்கைப் பணி, ஒரு தலைமுறைக் காலம் பல கோடி மக்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய செல்வாக்கினைப் பெற்றிருந்தது. ஆயினும் அந்தச் செல்வாக்கு பல நூற்றாண்டுக் காலம் நீடித்த செல்வாக்கைக் கொண்டிருக்கிற மகாவீரரைப் போன்று அவரை அத்துணை முக்கியத்துவம் வாங்ந்தவராக ஆக்கிவிடவில்லை.

தொகுத்தளித்தவர்
ஜி.கல்யான்குமார்.
System – Admin.

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

1. “நல்லவை என்றும் தீயவை என்றும் தனித்தனியாய் எதுவுமில்லை எண்ணங்களில்தான் எல்லாம் இருக்கிறது” என்றார் ஓர் அறிஞர். அருகிலிருந்தவர், “எப்படிச் சொல்கிறீர்கள்?” என்றார். “ ஒருவன் தன் சமய நம்பிக்கைக்காக ஏழு நாட்கள் உணவின்றி இருந்தான். இன்னொருவன் அதே ஏழு நாட்கள் உணவில்லாததால் இறந்தான். உணவு இல்லை என்கிற எண்ணம் அவனைக் கொன்றது. உணவு வேண்டாம் என்ற எண்ணம் இவனை வாழ வைத்தது” என்றார் அந்த அறிஞர்.
2. புருஸ்லீயும் அவரது நண்பரும் எட்டு நிமிடங்களில் மூன்று மைல் தூரம் ஓடுவார்கள். ஒருநாள் பூருஸ்லீ சொன்னார், “இன்று ஐந்து நிமிடங்களில் மூன்று மைல் ஓடுவோம்” என்று. ஓடத்தொடங்கி சிறிது நேரத்தில் முடியவில்லை! மூாரடைத்து செத்துவிடுவேன்!” என்றார் நண்பர்.”செத்துவிடு” என்றார் புருஸ்லீ. ஆவேசம் கொண்ட நண்பர் ஓட்டத்தைத் தொடர்ந்தார். அவரால் முடிந்தது. ஒரு குளியலுக்குப் பிறகு பூருஸ்லீ சொன்னார், “நம் செயல்களுக்கு நாமே எல்லைகளை வகுக்கக்கூடாது. நம் எல்லைகளை நாம்தான் உடைக்க வேண்டும். தன் எல்லைகளைத்தானே கடப்பவன்தான் மனிதன்.

தொகுத்தளித்தவர்
- திருமதி.கோ.பத்மபிரியா.
Human Resource

## போதும்

ஒரு வார்த்தை போதும்
- சமாதானம் தொடங்க
ஒரு தீண்டல் போதும்
- அழுகை அடங்க
ஒரு தீபம் போதும்
- இருட்டு நீங்க
ஒரு புன்னகை போதும்
- துயரங்கள் போக
ஒரு முயற்சி போதும்
- முயற்சிகள் தொடங்க
ஒரு மரம் போதும்
- வனம் ஒன்று தொடங்க
ஒரு மனது போதும்
- உத்வேகம் வழங்க
ஒரு முடிவு போதும்
- இலட்சியம் வகுக்க

தொகுத்தளித்தவா்
- ம.கிருஸ் தீபக்
Logistics.

## உன்னால் முடியும்

இறுதியாய் ஒன்று ஏ சின்ன சூரியனே
சீக்கிரம் எழுந்திடு உறங்கும் உலகிற்கு
உன் சிரிப்புத்தான் விடியலாம் !

மண்ணை முட்டி முளைப்பது முடியாது
என்றால் விதைகள் விருட்சமாவது
எப்படி?

புவி நெஞ்சில் புதைந்து விட்ட விதை ஒன்று
தணலின் மேல் தவமிருந்து தன்னைத் தானே
அடைகாத்து
தன் உறைகிழித்து முட்டி மோதி
முளைத்து முகம் காட்டி சிரிக்கிறது

சுருங்கிய விதைக்குள் தான்
உறங்கியே கிடக்கிறது விருட்சத்தின் சூட்சுமம்

எந்த வெற்றியின் உச்சியை
வேண்டுமானாலும் நீ நுகா்ந்து பாா்

அங்கே வியா்வையின் நாற்றமே வீசுமே தவிர
பூக்களின் வாசம் அன்று.

நமது நம்பிக்கை
என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## வறுமை

சரித்திர ஏடுகளை புரட்டி
சாதனையாளனின்
பக்கங்களை வாசித்துப்
பாா்த்தேன்,

உழைப்பெனும் மந்திரச் சொல்
உயிரினை உரசி
உத்வேகம் தந்தது,

ஆனால் அத்தனை ஏடுகளும்
வறுமை என்னும் நூல் கொண்டு
தைக்கப்பட்டிருக்கிறதே...
ஓஹோ...!

வறுமைதான் நமக்கு
வளா்ச்சியோ....!

ஜி.கல்யான்குமாா்.
System – Admin.

# மொழி முறிப்பான் காய்ச்சல்

## (சிக்-குன் குனியா)

சிக்-குன் குனியா காய்ச்சல் என்பது டெங்கு காய்ச்சலைப் போல் ஒரு நுண்ணுயிரி காய்ச்சல். சித்த மருத்துவத்தில் ‘மொழி முறிப்பான் காய்ச்சல்’ என்று சொல்கிறோம். நுண்ணுயிரி தொற்றுள்ள ஒரு மனிதனைக் கடிக்கும் கொசு, அதே வீரியத்தோடு இன்னொரு மனிதனைக் கடிக்கும்போது, முதல் மனிதனின் நுண்ணுயிரி இன்னொருவரைத் தாக்கி காய்ச்சல் ஏற்படுகிறது.

சிக்-குன் குனியா காய்ச்சல், ‘ஈடிஎஸ்’ என்னும் ஒரு வகை கொசு கடித்தால் மட்டுமே வரும். இரவில் மட்டுமல்லாமல் பகலிலும் இந்த ஈடிஎஸ் கொசு கடிக்கும். இந்தக் கொசு நன்னீர் மற்றும் மழைநீரில் மட்டுமே தன்னுடைய இனப்பெருக்கத்தைத் தொடங்கும். அதனால், குடம், வாளி, மண் பாண்டங்களில் உள்ள நீரை மூடி வைப்பது நல்லது. குடிநீரையும் மூடிவைத்தே குடிக்க வேண்டும். நீரை காய்ச்சி குடிப்பதும் நல்லது.

இது, இதற்குமுன்பு 1964ல் ஒருமுறை வந்திருக்கிறது. அப்போது, இவ்வளவு வேகமாக பரவவில்லை. தற்போது, வேகமாக பரவுவதற்கு காரணம் கொசுக்களை ஒழிக்க மக்கள் யாரும் முயற்சி செய்யவில்லை என்பதுதான்.

### நோயின் அறிகுறிகள்

1. உடனடி காய்ச்சல், தலைவலி
2. உடம்பு வலி
3. தசைகள் வலி
4. கை, கால் மூட்டுகள் வலி மற்றும் வீக்கம்

இது போன்ற உபாதைகள் தொடர்ந்து 5 முதல் 7 நாட்கள் வரை இருக்கும். முப்பது வயதிற்கு உட்பட்டவருக்கு இரண்டு வாரங்களில் முழுமையாக குணமாகிவிடும். முப்பது வயதிற்கு மேற்ப்பட்டவர்களுக்கு 5 முதல் 6 வாரங்கள் வரை தொடர்ந்து வலி இருக்கும். சர்க்கரை நோய், இதய நோய், சிறுநீரக நோய் இருப்பவர்களுக்கு இறப்பு கூட ஏற்ப்படலாம்.

### சிகிச்சை முறைகள்

இந்த நோயிற்கு அலோபதி மருந்துகள் இல்லை. இந்தியாவில், அலோபதி மருந்து கண்டுபிடிப்பதற்கான சோதனைகள் புனேயிலும், டெல்லியிலும் நடந்து வருகின்றன. அதற்கு முன்பு கொசுக்களை ஒழிப்பதுதான் இதற்குத் தீர்வாக இருக்க முடியும்.

அதேநேரத்தில், சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் சிக்-குன் குனியா நோயைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் மருந்துகள் உள்ளன.

நிலவேம்பு, அமுக்கரா (அஸ்வகந்தா) சூரணம், பிரும்மானந்த பைரவம் ஆகிய மூலிகைப் பொடிகளை சரிவிகிதத்தில் கலந்து சிறிதளவு தண்ணீர் ஊற்றி கசாயமாகக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். காலையிலும், இரவிலும் சாப்பிட்டவுடன் சிறதளவு கசாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து 5 நாட்கள் சாப்பிட்டு வந்தால், வலி பெரியளவில் குறைந்து விடும். இந்த மருந்தில் ‘கசப்பு’ மட்டுமே இருக்கும். பக்கவிளைவு எதுவும் வராது. நோய் தாக்காதவர்கள் இம்மருந்தை தடுப்பு மருந்தாகவும் பயன்படுத்தலாம்.

### நோய் வந்தவுடன் தவிர்க்க வேண்டியவை

1. ஆஸ்பிரின் மாத்திரை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்
2. மருந்துக் கடைகளில் சுயமாக மாத்திரைகள் பெற்று சிகிச்சை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்
3. பயிற்சி பெறாத நபர்களிடம் சிகிச்சை மேற்க்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்

இவை யாவும் உடலுக்குக் கேடு விளைவிப்பவை.

மருத்துவ மலரிலிருந்து தொகுக்கப்பட்டது

## FUNCTIONAL WISHES




**JUNE 17th**

**FATHERS DAY**

Best Wishes by Ti Employees.

## EXTERNAL SUPPORT

Banking : United Bank of India

Auditing : M/s. Nisar & Kumar

AQ Auditing : M/s. Juran Quality

Legal Adviser : Lr. M.K. Govindan

Central Excise : Mr. Raghavan

Health Care : M/s. Bethesda Hospital

## BIRTH DAY WISHES



| | |
|---|---|
| **master S. Dinesh** S/o. S. Sasirekha(Marketing) (☎-9382324911) | Jul 11 |
| **Mr.Balaji Viswanathan** Account asst (☎-9443098179) | Jul 04 |
| **Mr. Kalyan Kumar** SYS-admin (☎-9941392296) | Jul 21 |
| **Mrs. Hema Latha** Marketing (☎-9380811296) | Jul 24 |
| **Mrs. A. Seethalakshmi** M/o. A. Nirmala (☎-9840571157) | Jul 29 |

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!**

**அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!**

**Best Wishes by Ti Employees**

## உங்கள் இதயம் காக்க நீங்கள் செய்ய வேண்டியவை...

- ☛ பரபரப்புத் தன்மை, பதற்றத்துடன் வேலை செய்வதை தவிருங்கள்.
- ☛ தினமும் வாக்கிங் உள்பட உடற்பயிற்ச்சி செய்வதை தவிர்க்க முடியாத பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
- ☛ புகை பிடிப்பதைத் தவிருங்கள். புகை பிடிப்பவர்களுடன் உடகார்ந்து வேலை செய்வதையும் தவிருங்கள்.
- ☛ ரத்த அழுத்த அளவை எப்போதும் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள், உயர்நிலையில் 120 எம்எம்எச்ஜி- யும் கீழ் நிலையில் 80 எம்எம்எச்ஜி- யும் இயல்பானது.
- ☛ ஒட்டுமொத்த ரத்த கொழுப்புச் சத்து அளவு 200-க்குக் கீழே இருப்பது நல்லது. எல்டிஎல் எனப்படும் ரத்த கெட்ட கொழுப்புச் சத்து அளவு எப்போதும் 100-க்குக் கீழே இருக்க வேண்டும்.
- ☛ வெறும் வயிற்றில் செய்யப்படும் ரத்த பரிசோதனையில் ரத்த சர்க்கரை அளவு 100-க்குக் கீழே இருப்பது நல்லது.
- ☛ உடல் பருமனைத் தவிர்க்க இனிப்புகள்-தயிர்-நெய் உள்ளிட்ட கொழுப்புச் சத்து நிறைந்த உணவைத் தவிருங்கள்.

### <u>கண் தானம் செய்யுங்கள்</u>

**“இருக்கும் போது இரத்த தானம், இறந்த பின் கண் தானம்”**

ஒருவர் இறந்தபின் நிலத்திற்கோ, நெருப்புக்கோ இரையாகும் கண்களை, கருவிழி பாதிப்புகள் மூலம் பார்வை அற்றவர்களுக்கு ‘கண்வங்கிகள்’ மூலம் வழங்கி ஒவ்வொருவரும் கண்தானம் செய்யலாமே! நமக்கு அருகாமையில் ஏதாவது இறப்பு ஏற்படின் அவரின் உறவினர்களை கண் தானம் செய்ய ஒவ்வொருவரும் ஊக்குவிக்கலாமே! அதற்குள்ள உறுதிமொழி இன்றே எடுப்போமே! எடுத்துச் செல்வதுதான் ஒன்றும் இல்லை. கண்களையாவது கொடுத்துச் செல்வோமே! கண் தானம் செய்வதன் மூலம் கர்ணனைவிட உயர்ந்தவர் ஆகலாம்.

- ☛ கண்களுக்கு மரணமில்லை.
- ☛ ஆண்,பெண்,பெரியவர்,சிறியவர் என வித்தியாசமின்றி மரணத்துக்குப் பின் அனைவரும் கண்தானம் செய்யலாம்: வயது வரம்பு கிடையாது.
- ☛ கண்ணாடி அணிந்திருப்பவர்கள், சர்க்கரை நோய் உள்ளவர்கள், உயர் ரத்த அழுத்த நோய் உள்ளவர்களும் கண்களைத் தானமாகக் கொடுக்கலாம்.
- ☛ கண்புரை அறுவைசிகிச்சை செய்தவராக இருந்தாலும் கண்தானம் செய்யலாம்.
- ☛ கண்தானம் செய்ய விரும்புவோர் அருகில் உள்ள கண் வங்கிகளில் முன்கூட்டியே பதிவு செய்வது நல்லது.
- ☛ இறந்தவுடன் ஆறு முதல் எட்டு மணி நேரத்துக்குள் கண்களை எடுத்தால்தான் பயன் படுத்த முடியும்.
- ☛ இறந்தவரின் உடலுக்கு மேலே மின்விசிறி இயங்கிக் கொண்டிருந்தால், அதை ‘ஆ.்.ப்’ செய்யுங்கள்.
- ☛ இறந்தவரின் கண்கள் மீது பஞ்சை நீரில் நனைத்து வையுங்கள்.

**சிறுகதைகளபணியாளர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

மருத்துவ மலரிலிருந்து தொகுக்கப்பட்டது